622

கும்பகோணம் விவசாய சங்கத்தின் மாஸாந்திரப் பத்திரிகை.

வாலியம் 13] 1919-ளு மார்ச்சுமீ [நே. 3.

MONTHLY JOURNAL OF 8 PAGES
EDITED BY
Mr. R. Srinivasa Iyengar B. A., and Mr. A. Subramania Iyer, B. A.
Annual Subscription is One Rupee. Post Free.

கால் நடைகளின் சில சாதாரண வியாதிகள்.

(சென்ற ஜனவரி மீ த்திய 8-ம் பக்கத்தொடர்ச்சி.)

பரிகாரம்.

கர்ப்பூரத்தைலம் கிடையாதபோனால் அரைத்தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபாய் இடை கர்ப்பூரத்தையும் அரைத்தோலா அதாவது $\frac{1}{2}$ ரூபா இடை பெருங்காயத்தையும் நன்றாய்ப் பொடித்து எண்ணெயில் போட்டுக்கொடுக்கவும்.

இது தக்க பிரயோசனத்தைக்கொடுக்கும், இதில் கொடுத்திருக்கும் அளவு நடுத்தரத்து மாடுகளுக்கும் சிறுதரத்து மாடுகளுக்கும் கன்றுகளுக்கும் உடம்பறிந்து மருந்தைக் குறைக்கவேண்டும். ஒரு சமயம் இந்த மருந்தால் மாடு 1-மணி நேரத்தில் அதாவது $2\frac{1}{2}$-நாழிகைக்குள் சௌக்கியப்படாவிட்டால் திரும்ப ஒரு அவுன்சு அதாவது கால் மாகாணிபடி கர்ப்பூரத்தைலமும் 10-அவுன்சு அதாவது $1\frac{1}{2}$-ஆழாக்கு விளக்கெண்ணெயுமாவது அல்லது சுக்குத்தூள் 2 அல்லது $2\frac{1}{2}$-தோலா அதாவது 2 அல்லது $2\frac{1}{2}$-ரூபா. இடை நாட்டுச்சாராயம் 4 அல்லது 5-அவுன்சும் மாகாணி படி அல்லது 20-அவுன்சு அதாவது $2\frac{1}{2}$-ஆழாக்கு தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். வியாதியின் குறிகள் மாறினபின் சில தினங்களுக்கு மாடுகளுக்கு வழக்கமான தீனியை கொடுக்கக்கூடாது. 12-முதல் 24-மணி நேரத்திற்குப்பின் 30-முதல் 60 நாழிகைக்குப்பின் இலேசாகச் செரிக்கும் ஆகாரம் அதாவது அரிசிக்கஞ்சி கொடுப்பது உசிதம். பின் இரண்டு அல்லது மூன்று நாளைக்கு இரண்டு தோலா அதாவது இரண்டு ரூபா இடை சுக்குத்தூளும் நாலுதோலா அதாவது நாலு ரூபா இடை சோடா உப்பும் தீனியில் கலந்துகொடுக்கலாம். அல்லது தண்ணீரில் கலக்கிக்கொடுக்கலாம் அல்லது தண்ணீரில் கலக்கிப்போட்டுவிடலாம் அல்லது நாலைந்து நாளைக்கு சுக்குத்தூள் 2-தோலா அதாவது 2-ரூபா இடை நிலவேப்புத்தூள் 2 தோலா அதாவது 2 ரூபா இடை, எட்டி விரைத்தூள் $\frac{3}{4}$ அல்லது 1 தோலா அதாவது $\frac{3}{4}$ அல்லது 1 ரூபா இடை இவைகளைக் கலந்து கொடுக்கலாம். மேல் சொல்லிய சிகிச்சைகளில்

சரிப்படாது பயங்கரமான குறிகள் காட்டிக்கொண்டிருந்து கால்நடை வைத்தியர் கிடைக்காத சமயத்தில் அதிகமாகப் புடைத்திருக்கிற இடது பக்கத்தில் கடைசி நெஞ்செலும்பிற்கும் முதுகெலும்பிற்கும், பின்னங் கால் சப்பை மோட்டிற்கும் மத்தியில் ஒரு சுத்தமான கத்தியைக் கொண்டு ஆழமாகக்குத்தி காற்றைப்போக்கலாம். கத்தி சுத்தமாக இருந்தால்புண் அனேகமாய் ஆறிவிடும்.

7. ஈன்ற கால்நடைகளுக்குக் கொடி விழாதிருத்தல்.— சில சமயங்களில் பசுக்கள் கன்று போட்டு 24 மணி அல்லது 60 நாழிகை அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரை கொடி வயற்றில் தங்கி துற் குறிகள் காட்டாதிருந்தபோதிலும் 24 மணி நேரத்திற்கு அதாவது 60 நாழிகைமேல் கொடி விழாதுபோனால் அதைப்பற்றி நாம் கவனிக்க வேண்டியது அவசரம்.

காரணங்கள்.—காலத்திற்கு முந்தி பிரசவிக்கும்போது, அதிக நேரம் வாதைப்பட்டுப் பிரசவிக்கும்போது கொடி இலேசாய் விழுகிற தில்லை. இது கிழட்டுப் பசுக்களில் சகசம். வயது முதிர முதிர தேகத்தில் பலங்குறைந்து கொடியை வெளிப்படுத்த சக்தி இல்லாது போய்விடுகிறது.

நம் நாட்டில் கொடி விழாத சமயங்களில் 24 மணி அதாவது 60 நாழிகை நேரம்வரை கையிடாது பொறுத்திருக்கலாம். அதற்குமேலும் விழாதிருப்பதைக்கவனிக்காவிட்டால் மிகுந்த அசம்பாவிதங்கள் நேரிடும்.

குறிகள்.—கொடியின் ஒரு பாகம் சடையிலிருந்து தொங்கிக் கொண்டிருக்கும். மாடு அடிக்கடி பாதத்தைப் பூமியில் மோதிக்கொண் டும், வாலைச் சுழற்றிக்கொண்டுமிருக்கும் கொடியை வெளியே தள்ள அடிக்கடி முக்கிப்பார்த்தும் கொடி விழுகிறதில்லை.

பரிகாரம்.—மாடு எய்ப்பாயுங் களைப்பாயுமிருந்தால் நாட்டுச்சாராயம் 10 அவுன்சு அதாவது $1\frac{1}{4}$ ஆழாக்கு சமம் தண்ணீர் சேர்த்துக்கொடுக் கவும்.

ஒரு படி கம்புமாவைப்புட்டவியலாக அவித்து அத்தோடு 2 பவுன் அதா வது 14 பலம் பனை வெல்லஞ்சேர்த்துக்கொடுக்கவும் அல்லது Okra Capsules (வெண்டைக்காய்) 15 அல்லது 20 தோலா அதாவது 15 அல்லது 20 ரூபா இடையும் 10 தோலா அதாவது 10 ரூபா இடை என்றும் 10 தோலா அதாவது 10 ரூபா இடைபனைவெல்லமும் நன்றாய் இடித்து 1 படி கஞ்சியில் கலக்கிக்கொடுக்கலாம், இது தக்க விரேசனத்தை கொடுக்கும். தவறினால் இலேசாய் இழுத்து வெளிப்படுத்து மேற்பாடுகள் செய்யவேண்டும். இது தொழில்தெரிந்தவர்கள் செய்வது உசிதம். அவர்கள் கிடையாதுபோனால் கீழே விவரித்திருக்கிறபடி

செய்யவேண்டும். ஒரு அடி நீளமுள்ள இரண்டு தட்டையான குச்சிகள் எடுத்து வெளியே தொங்குகிற கொடியான நுனியை இரண்டு குச்சிகளுக்கு மிடையில் வைத்து குச்சிகள் ஒன்றின்மேல் ஒன்றுயிருக்க இரண்டுபக்கத்து நுனிகளையும் இரண்டு கைகளால் இறுகப்பிடித்து மேல்நோக்கி கொடியைக் குச்சிகளின்மேல் சுற்றவேண்டும். இப்படி இழுப்பதில் கொடிவராதிருந்தால் அப்படியே விட்டுவிட்டு மறுநாள் முயலவேண்டும். எந்தகாரணத்தாலும் கொடியை பலமாக இழுக்கக் கூடாது. கொடிவந்தபின் மாட்டின் தைரியத்தை கஞ்சி முதலியன கொடுத்துப் பலப்படுத்துவதைத்தவிர வேறு விசேஷமாய்ச் செய்வது ஒன்றுமில்லை. ௨, 3 நாளைக்குப்பின் எப்போதுங்கொடுக்கிற தீனிகொடுக்கலாம்.

எப் மேவர்,
சூபரின்டென்டென்டு, சிவில் வெட்டரினெரி,
டிபார்ட்டுமெண்டு,
மதராஸ்.

இருஜாதி மாடுகள்.

கொஞ்சமாயாகிலும் அதிகமாயாகிலும் இதர ஜாதி இரத்தக்கலப்பு சம்பந்தப்பட்ட மாடுகளுக்கு இரு ஜாதி மாடுகள் என்று சொல்லப்படும். பசுக்களின் பாலை விருத்திசெய்வதற்காக இதர தேசங்களிலிருந்து வேறு ஜாதி பொலி காளைகள் கொண்டுவரப்படுகின்றன. இவைகள் சென்னைப்பட்டணத்திலும் வேறு பெரியபட்டணங்களிலும் காணப்படும். இதர ஜாதி எருதுகள் இங்கிலாந்து அல்லது ஆஸ்திரேலியா தேசத்திலிருந்து ஆதியில் கொண்டுவரப்பட்டிருக்கலாம். அவைகளில் அயர்ஷையர், ஜெர்ஸி முதலான பல கிளுசு காளைகள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். தற்காலத்தில் இந்த இராஜதானியில் காணப்படும் இருஜாதிப் பசுக்கள் வர்க்கவிருத்தி செய்வதற்கென்ற நோக்கத்துடன் செய்த ஏற்பாட்டின்கீழ் விருத்தியாக்கப்பட்ட மாடுகள் அல்ல. அவைகள் வெளிதேசங்களிலிருந்து வியாபாரார்த்தமாய் இறக்குமதியான மாடுகளின் மூலமாயும் வேடிக்கையார்த்தமாய் இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளின் மூலமாயும் விருத்தியானதாகவும் தெரியவருகிறது. உள்ளூர் மாடுகளைவிட இந்த இருஜாதி மாடுகள் நல்ல பால் கொடுப்பதாக அனுபோகத்தில் தெரியவருகிறது. இருந்தாலும் இவைகள் (1) அடிபாடு தாளாததாயும் (௨) வெய்யில் தீக்ஷண்ணியம் பொறுக்காததாயும் (3) ஜாக்கிரதையாய்ப் பார்க்கவேண்டியதாகவும், நாட்டுமாடுகளைவிட இருஜாதி மாடுகள் தொத்து நோய்களால் அதிகமாய்ப் பாதிக்கப்

படுகின்றன. வெக்கை (Rinderpest) வியாதி வந்தால் அனேகமாய் இம்மாடுகள் பிழைப்பதேயில்லை. நாட்டு மாடுகளுக்கு கோமாரி (கால் நோய், வாய் நோய்) வந்தால் சீக்கிரத்தில் தெளிந்துபோவதைப் போல இம்மாடுகள் அவ்வளவு சீக்கிரத்தில் தெளிவதில்லை. இந்த இராஜதானியில் அதிக பால் கொடுப்பதொன்றே இந்த இருஜாதி மாடுகளின் முக்கிய குணமாயிருக்கிறது. பால் வியாபாரிகளுக்கு மட்டும் இம்மாடுகளை விருத்திசெய்வது அனுகூலமேயொழிய கிருஷிகர் சம்மந்தப்பட்ட மட்டிலும் அவர்களுக்கு இந்த இருஜாதி விருத்தி கெடுதலையே உண்டாக்குகிறது. கிருஷிகருக்கு பாரமான வேலைகளையும் கடினமான வேலைகளையும் செய்யவேண்டியிருப்பதாலும் இருஜாதிபசுக்கள் போஷிப்பு விஷயமாய் ஓர் பால் வியாபாரி செலுத்தும் கவனமும் பாராமரிப்பில் செலுத்தும் சிரத்தையும் இருஜாதி காளைகளுக்கு சாதாரண கிருஷிகரால் செலுத்தமுடியாதாகையால் கிருஷிகருக்கு இக்காளைகள் பிரதிகூலமே. சுருக்கமாகப் பட்டணங்களில் பசுக்களை அதிக கவனமாயும் போஷிப்பாயும் வைத்திருக்கக்கூடும். ஆனால் கிராமாந்தரங்களில் இருக்கும் எருதுகளை இப்படிவைக்கமுடியாது. அருந்தல் காலங்களிலும் கருவு காலங்களிலும் இந்த இருஜாதி மாடுகளை நாட்டுமாடுகளை விட அதிக கஷ்டப்படுகின்றன. கிராமாந்தரங்களில் ஓர் குடியானவனிடத்தில் இந்த இருஜாதிக் காளைகளிருந்தால் என்ன சம்பவிக்குமென்பதை சற்று ஆராய்வோம். வெக்கை (Rinderpest) நோய்வந்தால் இருஜாதி மாடுகள் பூராவும் சாகும். கோமாரி (கால் நோய், வாய் நோய்) வந்தால் நாட்டுமாடுகள் சீக்கிரத்தில் தெளிந்து வேலைசெய்துகொண்டிருக்க இம்மாடுகள் தேற அதிக காலமாகும். விதைப்புக்காலத்தில் வெக்கை வந்துவிட்டால் மாடுகள் இல்லாததால் விதைக்கமுடியாது. கால் நோய், வாய் நோய் வந்துவிட்டால் இருஜாதி மாடுகள் தெளியுமுன் விதைக்கும் பருவம் சென்றுவிடும். ஆகவே நாட்டுமாடுகள் வைத்திருந்தவர்களுக்கு விதைப்புக்காலத்தில் விதைத்ததால் ஆள்களுக்குவேண்டிய தானியமும் மாடுகளுக்குவேண்டிய தீவனமும் விளையும். இருஜாதி மாடுகள் வைத்திருப்பவனுக்கோ சரியான காலத்தில் விதைக்க மாடுகள் இருக்காததாகையால் தானிய தீவன பஞ்சம் ஏற்படும். ஆகையால் கிருஷிகர் ஒங்கோல், மைசூர், காங்கேயம் போன்ற நாட்டுஜாதி மாடுகளையே உபயோகிக்கவேண்டும்.

ஆலன் கருத்,
டிப்டி டைரெக்டர் ஆப் அக்ரிகல்சர், லைவ்ஸ்டாக்,
மதராஸ்.

43

சென்னையில் நீலிச்சாயம் செய்யும் விதம்.

சென்ற வருஷத்தில் அநேக காரணங்களைக்கொண்டு நீலிச் சாயத்தின் விலை கம்மிபட்டுவிட்டது. வியாபாரிகளிடத்திலும் சரக்கு செய்பவர்களிடத்திலும் இக்காரணத்தால் சரக்கு வாங்குபவர்களில்லாமல் ஜாஸ்தியாய் சரக்குக் கையுருப்பிலிருந்துவிட்டது. 1914-ம் வருஷத்தில் சரக்குக்கு ஏற்பட்ட விலை குறைந்துவிட்டது. தற்காலம் நடக்கும் யுத்தம் முடிவானபின், யுத்தம் ஆரம்பமாவதற்க்குமுன் எப்படி நீலிச் சாயம் டப்பா சாயத்தின் விலையைவிட சகாயமாமவே விற்றுக்கொண்டிருந்ததோ அதேமாதிரி வந்துவிடுமென்று எதிர்பார்க்கவேண்டியிருக்கிறது. ஆகையால் தற்காலம் அவிரிப் பயிர் சாகுபடிசெய்வதில கிருஷிகர் இலாயம் எவ்விதமாயடையக்கூடுமென்பதை சற்று கவனிக்கவேண்டும். இப்பயிர் சாகுபடிசெய்வதில் பூரா இலாபத்தை யடைய விரும்புகிறவர்கள் இப்பயிரை சாகுபடிசெய்து அதை பசுந்தாளெருவாக உழுது மக்க வைத்து எருவாக்குவதைவிட அதை யறுத்து தொட்டியிற்போட்டு நீலி மருந்து எடுத்துக்கொண்டு அப்பால் அந்நீலிச்சக்கையையும், தொட்டி கழிவுத் தண்ணீரையும் எருவாக உபயோகித்தால் நல்ல இலாபம் கிடைக்கும்.

அவுரித்தழை பச்சையாயிருக்கும்போது எருவாயுபயோகிப்பதைவிட தொட்டியில்போட்டு ஊரவைத்து பிறகு எருவாயுபயோகிக்க அதிக லாயக்கானது. மேலும் தழையை யறுத்துத் தொட்டியில்போட்டு மருந்தாக்குவதில் பிடிக்கும் செலவு அம்மருந்தை விற்கும் விலையிலிருந்து கிடைக்கும். ஆகையால் தொட்டியில் ஊரப்போட்டபின் சக்கையை எருவாயுபயோகித்தால் மருந்திலிருந்து கிடைக்கக்கூடிய லாபத்துடன் சக்கையிலிருக்கும் ஜாஸ்தி எருசசத்தம் கிடைக்கும். இவ்விராஜதானியில் அநேக பாகங்களில் நீலிச்சாயம் செய்யும் விதங்களில ஏற்படும் காரணங்களினால் அச்சாயம் உள்நாட்டின் உபயோகத்திற்காக லாயக்காயிருக்கிறதே யொழிய ஏற்றுமதிக்கு லாயக்கில்லை. ஏனென்றால் வட இந்தியாவில் செய்து இதர தேசங்களுக்கு ஏற்றுமதியாகும் நீலிச் சாயத்திற்கும் மற்ற டப்பா நீலிச்சாயத்திர்கும் இது மெத்தத் தாழ்மையானது.

நீலிச்சாயக்கட்டிகள் (வில்லைகள்) பளுவில்லாமல் இலேசாயும் காந்தியாயுமில்லாமல் கெட்டியாயும் கனமாயும் அதிகக் கேவலமான ரங்குடனும் இருப்பதால் அவைகளை மிக கேவலமான விலைக்கே வர்த்தகர்கள் கேட்கிறார்கள்.

நீலிச்சாயத்தை இதர தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்து, அது அங்கு சேர்ந்தவுடன் அதிலிருந்து மாதிரிகளெடுத்து அவைகளை ரசாயனக்கூறுபாடு செய்ததின்பின் தான் அவைகளுக்கு விலை ஏற்படுத்துகிறார்களென்கிற சங்கதி இவ்விடத்தில் கிருஷிகரும் நீலித்தொட்டி வைத்திருப்பவர்களும் நினைக்கிறதில்லை. ரசாயன சாஸ்திரி ஒவ்வொரு வில்லையிலும் இவ்வளவு ஈரப்பதம், மண் முதலாகிய அழுக்குகள் எவ்வளவு, சாயச் சரக்கு எவ்வளவு, அன்னிய வஸ்துக்கள் இருக்கிறதென்று கண்டுபிடிக்கிறார். வாங்குகிறவர்கள் சாயச் சரக்கு ஜாஸ்தி அல்லது கம்மிக்குத் தக்கபடி ஜாஸ்தி அல்லது கம்மி விலைகொடுக்கிறார்கள். இங்கேயோ நீலி வர்த்தகர்கள் நீலி வில்லைகளை கையில் தூக்கி பளுவாயிருக்கிறதா இலேசாயிருக்கிறதா என்று பார்த்தும் உடைத்து வர்ணம் சரியாயிருக்கிறதா என்று பார்த்தும் தரம் பிரிக்கிறார்கள். சென்னை இராஜதானியில் அதிக உசத்தியென்று தரம்பிரித்த சரக்கானது, பேகார் மகாணத்தில் செய்ததைவிட தழ்ந்த சரக்காய் எண்ணப்படுகிறது. இவ்விரண்டு சரக்குகளுக்கும் சாதாரணமாய் ஏற்படும் ஏற்றக் குறைச்சல்களுக்கு வாஸ்தவமாக விலையில் எவ்வளவு பேதயிருக்க வேண்டுமோ அதைவிட ரொம்பவும் ஜாஸ்தியாய் சென்னையில் செய்யும் சரக்குக்கு விலை குறைத்துவிடுகிறார்கள். இவ்விஷயம் இங்கு சரக்கு உற்பதி செய்கிறவர்கள் முக்கியமாய் கவனிக்கவேண்டிய விஷயம். சரக்குக்கு சற்று தாழ்ந்ததரமாயிருந்தால் அத்தாழ்ந்ததரத்திற்கு எவ்வளவு தூரம் தான் விலையைக்குறைக்க வேண்டுமோ, அதைவிட ஜாஸ்தியாய் விலையைக் குறைத்து விடுகிறார்கள். ஆகையால் நீலிச்சரக்கு எந்த மாதிரியாய் செய்தால் விலை குறைக்கக்கூடாததரமாய் வைக்கக்கூடும் என்ற விஷயம் கவனிக்கவேண்டியது அதிக அவசியம். அப்படி கவனிக்காவிட்டால் ஏற்று இறக்குமதி எப்போதும்போல் திரும்பவும் நடக்கும்போது சென்னையில் உற்பத்தியாகும் நீலிச்சரக்கு ரொம்ப கேவலமான விலைக்குத்தான் விற்கும். அப்படி விற்றால் நீலிசாயசத்து ஜாஸ்தியாயிருக்கும்படி செய்த வர்த்தகர்களுக்கு ஜாஸ்தி விலை கிடைக்குமே தவிர குறைச்சலாய் நீலிசத்து உண்டாக்கினவர்களுக்குக் கிடைக்காது.

நீலிச்சரக்கு உற்பத்தி செய்கிறவர்கள், அவர்கள் உற்பத்திபண்ணுகிற சரக்கில் யாதொரு மண் முதலாகிய அந்நிய வஸ்து கலப்பில்லாமலும் ஜாஸ்தி சாயசத்துள்ளது யென்று உறுதி சொல்லுவதுடன் அப்பிரகாரம் செய்யவும் முயலவேண்டும். அப்போதுதான் இங்குசெய்யும் சரக்குக்கு நல்லபேருண்டாகும். நீலிச்சரக்கில் கலந்துசெய்கிற வழக்கம் இவ்விராஜதானியில் அநேக இடங்களில் இருக்கிறது. எங்கங்கே

தற்காலத்தில் சரக்கு கேவலமாய் செய்யப்படுகிறதோ அங்கேதான் கலைத்து செய்தால் கெட்டுப்போமோ அப்படிப்பட்ட சரக்கு செய்யுமிடங்களில்தான் ஜாஸ்தி கலவன் செய்யும் வழக்கம் இருந்துகொண்டிருக்கிறது. சரக்குசெய்கிறவர்கள் இடை ஜாஸ்திசெய்யும் பொருட்டு மண்ணையும் இதர வஸ்துக்களையும் நீலிச்சாயத்துடன் கலந்து அப்படிப்பட்ட சரக்குத் தங்களால் விற்கமுடியவில்லையென்று முறையிடுவது உபயோகமற்ற காரியம். சாயம்போடுகிறவர்கள் நீலிமருந்திலிருக்கும் ஊதாரங்கைக்கொண்டு, துணி, நூல் முதலியவைகள் சாயமேற்றுகிறார்களே தவிர, மண், கழிமண் முதலியவைகளை சாயம்போட உபயோகப்படுத்துவதில்லை. ஆகையால் மணல் கழிமண் முதலாகியவை கலப்பில்லாத சாயச்சரக்கேதான் வாங்குவார்கள். சாதாரணமாய நீலித்தழையை தொட்டியில்போட்டு சரக்காகும்வரை ரொம்பவும் கவனம் செலுத்தி நல்ல சரக்குச்செய்வதேயொரு வருத்தமான காரியம். அப்படியிருக்கவேண்டுமென்று கலைத்து செய்பவர்கள் எப்படி நல்ல சரக்கு உண்டாக்கக்கூடும்.

சரியான நீலிச்சாயம் செய்யவேண்டுமென்றால் இதனடியிற் குறிப்பிடும் முறைகளைக் கவனிக்கவேண்டும்.

(1) தழையை சரியான பதத்தில் அறுக்கவேண்டும்

(2) அறுத்த தழையை மண் முதலானவைகள் கலக்காமல் வைக்க வேண்டும்.

(3) தழையை அறுத்தபின் தாமதமின்றி ஜல்தியில் தொட்டியில் ஊறப்போடவேண்டும்

(4) தொட்டியில் தழை ஜாஸ்திநேரம் ஊறக்கூடாது. எவ்வளவு நேரம் தான் ஊறவேண்டுமென்பது தழையை ஊறப்போடும் தண்ணீரின் சீதோஷ்ணத்தைப் பொருக்கும்.

(5) ஊறப்போட்ட தொட்டியிலிருந்து அடிக்கும் தொட்டிக்குத் தண்ணீர் வந்தவுடனே யதொரு தாமதமில்லாமல் தண்ணீரைக் கலக்கவேண்டும்.

(6) தொட்டியில் அடித்து மருந்துகீழேபடிந்து அத்தொட்டியிலிருக்கும் மேல் தண்ணீரை வெளியே விட்டவுடன் யதொரு தாமதமின்றி மருந்தை வழித்து அண்டாவில் காய்ச்சி மருந்தாக்கவேண்டும்.

7. தழையை எப்பதத்தில் அறுக்கவேண்டுமென்பது பயிரின் வயது, அறுக்கும் பட்டம், அதின் சீதோஷ்ணஸ்திதி, இலையிலுள்ள சத்தின் தாரதம்மியம் முதலியவைகளைப் பொருக்கும். என்றாலும், பொதுவில் செடி புஷ்பிக்க ஆரம்பிக்கு முன் தழையையறுப்பது மெத்தநல்லது.

செடி பூத்தபின் அறுத்தால் அத்தருணத்தில் இலைகளிலுள்ள நீலிச்சாயச் சத்து குறைச்சலாயிருக்குமாகையால் சாயச்சரக்கு குறைச்சலாகவே கிடைக்கும். தழையை அறுத்தமாத்திரத்தில் அதிலிருக்கும் நீலிச்சாயச் சத்து குறையும் குணமுடையதால் அவ்வளவுக் கெவ்வளவு அறுத்தபின் ஜாஸ்திநேரம் அதைத் தொட்டியில் ஊறப்போடாமல் வைத்திருக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு தழையிருந்து தண்ணீரில் ஊறி இறங்கக்கூடிய சாயச் சத்துக்குறையும். அறுத்த பின்னும், தொட்டியில் போடுமுன்னும் அறுத்த தழையையும் இலையையும் மண்ணில் கலக்கவிடாமல் சுத்தமாய் ஒரு இடத்தில் ஜாக்கிரதையாய் வைப்பது மிகவும்முக்கியம். ஆனால்தொட்டியில் ஊறப்போடுவதற்கு சற்று தாழ்தமாகக்கூடிய சந்தர்ப்பங்களில், ஒன்றுமேலொன்று அடுக்கியிருக்கும் சுமைகள் அவிந்துபோகாமலும் அவைகளில் ஆவிபரக்காமலும் வைத்திருக்கவேண்டும். ஏனென்றால் அப்படி அவிந்துபோய் ஆவிபரந்தால் இலைகளிலிருக்கும் பச்சைநிறம் சீக்கிரம் மாறுவதுடன் அவைகளிலுள்ள சாயச்சத்தும் கெட்டுப்போய்விடும்.

தொடரும்

பசுக்களை எப்போது பொலியவிடக் கொண்டுவரவேண்டும்.

(சென்ற டிஸம்பர்மீ த்திய 72-ம் பக்கத் தொடர்ச்சி.)

பொலிந்தபின் மறுபடியும் பொலிப்பெடுத்தல்.

சிலசமயங்களில் மாடுகள் பொலிந்த 21 நாட்களுக்குப்பின்னாகிலும் அல்லது, வேறு காலங்களிலாகிலும் பொலிப்பில் வரலாம். முதல் குறிப்பிட்டவை இன்னொருதரம் பொலிந்தபின் சினையாகலாம். ஆனால் சினைத்த நேரத்தில் பொலிப்பெடுக்கும் பசுக்களை மறுபடியும் பொலியவிட்டாலும் அவை சினையாவது சந்தேகம், மாடுகள் பொலிந்த 19-முதல் 22-வது நாள் வரையில் அவைகள் மறுபடியும் பொலிப்பில் வருகின்றனவாவென்பதை கவனிக்கவேண்டும். 3-வாரங்களில் அல்லது சினைத்தபோது பொலிப்பெடுத்தால் சினை விசிறிவிட்டதென்றாகிலும் அல்லது வேறு காரணங்களால் சினைப்படவில்லை யென்றாவது சந்தேகப்படவேண்டும்.

ஆலன் கருத்,

டிப்டி டைரக்டர் ஆப் அக்ரிகல்சர், லைப் ஸ்டாக், சென்னை.

Printed at the Alexandra Press, Kumbakonam and Published by Mr. Rao Sahib C. R. Lakshmivaraha Ayyangar, B.A., B.L., & Mr. R. Srinivasa Ayyangar, B.A., for The Agricultural Association, No. 5, Cutchery Road Kumbakonam.